ரிதிமாலியத்த பிரதேச சபை - 2023

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் தொழில்நுட்ப உபகரணங்களில் 06 அலகுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 136,125 நடைமுறைச் சொத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சொத்துக்களின் இருப்பு தொடர்பில் கவனம் செலுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 472,423 மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,661,202 குறைத்து நிதிக் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நீர் வருமானம் ரூபா 533,184 குறைவாகும். கடை வாடகை வருமானம் ரூபா 28,767 மற்றும் சந்தை வாடகை வருமானம் ரூபா 3,583,197 குறைவாகவும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மஹியங்கனை பிரதேச சபையின் கல் உருளை சேவையில் ஈடுபடுத்தியதற்காக செலுத்த வேண்டிய ரூபா 114,912 கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | போதியளவான கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற கிடைக்க வேண்டிய மீதி ரூபா 2,900,188 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நீண்டகால ரீதியில் கொண்டு வரப்படுகின்ற கடன் மீதியை பதிவழிப்பதற்கு அறிக்கை ஒன்று கௌரவ ஆளுநருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | சபைக்குரிய 06 வாகனங்களுக்கு 2019, 2020, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பான நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முழுமையான அறிக்கை குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை விரைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,469,115 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,827,035 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 1,805,700 | 2,468,828 | 1,336,150 | 1,132,678 | 1,842,000 | 1,397,323 | 909,532 | 487,791 |
| **(ii)** | வாடகை | 5,878,200 | 5,186,649 | 4,956,985 | 229,664 | 6,002,000 | 3,690,659 | 5,470,627 | - |
| **(iii)** | அனுமதிப்பத் திரக் கட்டணம் | 1,000,500 | 1,000,500 | 835,000 | 165,500 | 902,500 | 902,500 | 820,500 | 82,000 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 4,000,000 | 8,474,221 | 1,169,319 | 7,304,902 | 2,160,000 | 3,955,814 | 4,881,854 | - |
| | மொத்தம் | 12,684,400 | 17,130,198 | 8,297,454 | 8,832,744 | 10,906,500 | 9,946,296 | 12,082,513 | 569,791 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,436,391 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,169,540 பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகள் தயாரிப்பதற்கு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எக்கிரியன்கும்புர நீர் செயற்திட்டத்தில் இருந்து பொது மக்களுக்கு தொடர்ச்சியாகவும், போதியவாகவும் நீர் வழங்காமையின் காரணமாக 50 நீர் பாவனையாளர்களுக்கு நீண்டகாலத் தில் இருந்து நீர் செயற்திட்டத்தின் நீரை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே நீர் செயற்திட்டத்திற்கு நீரை பெற்றக்கொள்வதற்கு எக்கிரியன்கும்ர்ர வைத்தியசாலை வளவில் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணறின் நீர்ப் பம்பி 24 மணித்தியாலம் முழுவதும் செயற்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் சனவரி முதல் செப்டெம்பர் 30 வரையான காலத்தில் செயற்திட்டத்தின் மின்சாரக் கட்டணமாக ரூபா 680,865 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்த சராசரி மின்சார செலவினம் ரூபா 75,651 ஆன உயர்ந்த பெறுமதியொன்று நீர் பம்பிக்காக செலவிடப்பட்டிருந்த போதும் போதியளவான நீர் இயலளவை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நீர் பாவனையாளர்களின் தேவை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 5,200,000 செலுத்தி நிர்மாணிக்கப்பட்ட 02 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மூடி வைக்கப்பட்டிருந்ததுடன் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் மற்றும் அறிவித்தல்களை மீண்டும் இரத்துச் செய்தததன் காரணமாக ரூபா 116,458 செலவிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவக் குழு பரிந்துரையின் பிரகாரம் 03 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட கடைகளுக்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பின்னர் உள்ளுராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் 25 வருடங்களுக்கு கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் மற்றும் அதனை இரத்துச்செய்ய வேண்டி ஏற்பட்பட்டிருந்தது. | சரியாக முகாமைத்துவ த் தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நீர் செயற்திட்டத்தின் மூலம் 494 பாவனையாளர்களுக்காக நீர் வழங்கப்பட்டிருந்ததுடன் நீர் செயற்திட்டத்தின் மூலம் 2022 சனவரி முதல் 2023 செப்டெம்பர் வரை ரூபா 1,959,039 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அந்த காலத்தின் போது நீர் செயற்திட்டத்தின் பராமரிப்புக்காக ரூபா 5,588,951 செலவிடப்பட்டிருந்தது. | பொது மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் அடிப்படைப் பொறுப்பாக இருந்தமை மற்றும் நீர் உத்தேசத் திட்டத்தின் பராமரிப்பு செலவினம் அதிகரித்ததன் காரணமாக கிரயம் உயர்வடைந்து சென்றமையால் வருமானம் குறைவடைந்திருந்தது. | வருமானம் மற்றும் செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போதும் ‘‘கமின் கமட தொறன்தொரட்ட’’ வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 13 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 481,487 முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத முற்பண மீதிகளை கணக்கீட்டுக்கு பதிவழிப்பதற்கான அறிக்கையொன்று கௌரவ ஆளுநருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிகள் நிறைவுபெற்றவுடன் முற்பணம் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குரிய சபைக் கட்டிடத்திற்கு அருகில் அமைந்துள்ள சந்தை வளவில் இலக்கம் 01 மற்றும் 02 திறந்த கடைகள் இரண்டும் ஒரு கடையாக தனியார் செலவினத்தில் சுவர் கட்டி அவிருத்தி செய்வதற்கு 2021 மார்ச் 23 ஆம் திகதி வாடகையாளருடன் சபை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. பின்னர் அந்த வாடகையாளருடன் 03 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை ரூபா 2,500 வீதம் அறவிடுவதற்கு 2021 நவம்பர் 10 ஆம் திகதி | வாடகை உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு வழங்கி வாடகை அறவிடப்படுவதுடன் அண்மைக் காலத்தில் அந்த இடங்கள் அபிவிருத்தி செய்து கேள்வி கோரி வாடகைக்கு வழங்கப்படும். | கடைகளை முறையாக மதிப்பீடு செய்து வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |

மீண்டும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது பிரதேசத்தில் மேலும் 10 தரப்பினர்கள் சந்தை வளவில் வியாபார நிலையங்களை பெற்றுக்கொள்வதற்கு கோரியிருந்த போதிலும் அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு ஒரு தரப்பினருக்கு மாத்திரம் முறையான திட்ட முறைமைக்கு புறம்பாக கடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய 05 வாகனங்களை பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை மற்றும் பயன்படுத்துவதற்கு எடுக்காமையின் காரணமாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் பயனற்றுக் காணப்பட்டது. | நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | சபைக்குரிய வாகனங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) சபைக்குரிய 03 டெக்டெர்கள், 02 டெக்டர் டெய்லர், லொறி ஒன்று மற்றும் 03 மோட்டார் சைக்கிள் உரித்து என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | விரைவாக சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வாகனங்களின் உரித்து தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தின் போது பிரதேச சபையின் 19 பொது மக்கள் பிரதிநிதிகளுக்கு உறுப்பினர் படிகள் மற்றும் தொலைபேசிப் படியாக ரூபா 105,357 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சில பொது மக்கள் பிரதிநிதிகள் தற்போது உறுப்பினர் படிகள் மற்றும் தொலைபேசி படிகள் செலுத்தியுள்ளதுடன் ஏனைய தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள உறுப்பினர் படிகள் மற்றும் தொலைபேசிப்படிகள் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான சிறிய ரக கெப் வண்டியின் மைலோ மீற்றர் 2021 திசெம்பர் மாதம் முதல் 2023 ஒக்டோபர் வரை செயலிழந்து காணப்பட்டதுடன் மைலோ மீற்றர் இன்றி கிலோ மீற்றர் 36716 தூரம் ஓடியதற்கு எரிபொருள் லீற்றர் 4590 பயன்படுத்தப்பட்டிருந்தது. | தாய்க் கம்பனியிலிருந்து மைலோ மீற்றரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக மைலோ மீற்றர் பொருத்தப்படல் வேண்டும். |